# தீராது என்தனது ஆசை.



தீராது என்தனது ஆசை - அதனை,

தீர்ப்பதுன் கடமையன்றோ கண்ணா !

தீராது........

தினமும் என்முன்னே நீயும் வந்து,

திகைப்பினில் ஆழ்த்திட வேண்டும் - உன் ;

திகட்டாத குழலிசையில் நானுமே,

திளைத்து மறந்திடல் வேண்டும் !

தீராது........

மதிபோன்ற உன்தன் முகம் கண்டு,

மதியிழந்து நான் நின்றிடவேண்டும் - உன் ;

மடியில் என்தலைவைத்து நானுமே,

மடியுவரை உறங்கிடல் வேண்டும் !

தீராது.....